நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து இன்று தி.மு.கழக வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழகத் **தலைவர்** அவர்களின் அறிவுரையின்படி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், கழக வேட்பாளர்களாக போட்டியிடுபவர்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்து குறித்து கலந்தாலோசிக்க, "தி.மு.க. வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (22.3.2024 - வெள்ளிக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இதில், தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அவர்கள், கழக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து ஆலோசனைகள் வழங்கிட உள்ளார்.

இக்கூட்டத்தில், கழக வேட்பாளர் அல்லது அவரது முகவர், கழக வேட்பாளர் போட்டியிடும் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் - 20.3.2024

**தலைமைக் கழகம்**,
தி.மு.க.

# 'இந்தியா' கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து தெரிவித்தனர்!

*சென்னை, மார்ச் 22-*

*நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது ஆகியோர் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.*

*இது பற்றிய விவரம் வருமாறு:-*

*முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் மற்றும் நிர்வாகிகள்*

*அதே போன்று இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.*

*முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை 19.3.2024 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்;*

*மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா மற்றும் நிர்வாகிகள்;*

*ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் மற்றும் நிர்வாகிகள்;*

*தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் மற்றும் நிர்வாகிகள்;*

*சமத்துவ மக்கள் கழகத்தின் தலைவர் எர்ணாவூர் நாராயணன் மற்றும் நிர்வாகிகள்; மனிதநேய ஜனநாயகக் கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் நிர்வாகிகள் மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் முருகவேல்ராஜன் மற்றும் நிர்வாகிகள்; தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் மற்றும் நிர்வாகிகள்; ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, 'இந்தியா' கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.*

*இந்நிகழ்வில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ. இராசா, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, எ.வ.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.*

# இராணுவ வீரர்கள் சென்ற ரயில் தடம் புரண்டது:

## பீகாரில் பரபரப்பு!

பாட்னா, மார்ச் 22–

பீகாரில் இராணுவ வீரர்கள் சென்ற ரயில் பெட்டிகளின் இணைப்பு துண்டிக்கப் பட்டதால் விபத்து ஏற்பட்டது. வீரர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். ராஜஸ்தானில் இருந்து மேற்குவங்க மாநிலம் சிலிகுரிக்கு சிறப்பு ரயில் மூலம் ராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்தனர். பீகார் மாநிலம் கோரக்பூர் – நர்கதியாகஞ்ச் இடையே உள்ள பகாஹா ரயில் நிலையத்திற்கு ரயில் சென்ற போது, திடீரென ரயில் பெட்டிகளின் இணைப்பு ஒரு இடத்தில் துண்டித்தது. அதனால் முன்னாள் சென்ற இன்ஜினுடன் இணைக்கப்பட்ட பெட்டிகள் தனியாக சென்றது. மற்ற இணைப்பு பெட்டிகள் பாதி வழியில் நின்றது.

தகவலறிந்த ரயில்வே அதிகாரிகள், கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்து முன்னால் ஓடிக் கொண்டிருந்த ரயிலை நிறுத்தினர். இதுகுறித்து மேற்கு சப்பரன் கலெக்டர் தினேஷ் குமார் ராய் கூறுகையில், 'விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் மீட்புப் பணியை துரிதப்படுத்தி உள்ளனர். அதிர்ஷ்டவசமாக ராணுவ வீரர்கள் அனைவரும் பத்திரமாக உள்ளனர். தண்டவாளத்தை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு பின்னர், இந்த வழித்தடத்தில் விரைவில் ரயில்கள் இயக்கப்பட்டன' என்றார்.


# 7 வது ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 22.03.2024 வியாழக்கிழமை



MJF.Ln. **Dr.M.V.இராமு** B.Com.,

❖ தோற்றம் : 21.12.1935 ❖ மறைவு : 22.03.2017

**உரிமையாளர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா தியேட்டர், கூடுவாஞ்சேரி.**
**ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மாளிகை, கூடுவாஞ்சேரி.**
**முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் தி.மு.க**
**முன்னாள் தலைமை தணிக்கை குழு உறுப்பினர் தி.மு.க**
**முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், காட்டாங்கொளத்தூர்**
**முன்னாள் பொருளாளர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, சென்னை.**

*என்றும் உங்கள் நினைவில்*

மனைவி : **R.பாரதி**
மகன்கள் : **இராமு பாஸ்கர்** B.E., M.S.,
**இராமு ஜிஜேந்திரன் (ஜிஜி)** B.E., M.S.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர் தி.மு.க
மகள் : **R.மோகனலட்சுமி ஸ்ரீதர்**
**எண்: 4, கம்பர் தெரு, கூடுவாஞ்சேரி செல் : 8754447070**








சுயமரியாதைச் சுடர்
# கீரை ஆ.தமிழ்ச்செல்வன்
27 – வது நினைவு நாள்
22.03.2024

அன்பு தந்தையே,
தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,
திராவிடப் பெருந்தலைவர் கலைஞர்
ஆகியோரின் கொள்கை வழி நின்று
**மாண்புமிகு கழகத் தலைவர்**
தலைமையில் இந்தியாவை பாதுகாத்திட
**மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
கரம் பற்றி நாற்பதுக்கு நாற்பதும்
வெற்றி பெற்றிட அயராது உழைத்திடுவோம். வென்றிடுவோம்..

நினைவுடன் : **கீரை.தமிழ்இராஜா** B.A,B.L
தலைமைச் செயற்குழு உறுப்பினர் – புதுக்கோட்டை
: keeraitamilraja